தொகுதி-8 எண் 4
Vol. 8 No. 4

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

புரட்டாசி- மார்கழி 2051
October - December 2020
ISSN : 2321-984X
2021

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

26 பகுதி
Part

தமிழாய்வு
தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

Journal of
**Modern Thamizh Research**
(A Quarterly International Multilateral Thamizh Journal)

தொகுதி-8 எண் 4
Vol. 8 No. 4

புரட்டாசி- மார்கழி 2051
October - December 2020

ISSN : 2321 - 984X


சான்றிதழ்

# Certificate

*This is to certify that Dr. / Mr. / Ms.*

செ. யசோதா
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

*has Published a paper titled*

பண்ணைக்குலமக்களின் வாழ்வும் வரலாறும்

Sl.No. 243 250
Pages 1514-1518


Published by

RAJA PUBLICATIONS
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com



Chief Editor
Dr. M. Sadik Batcha
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in

| | | | |
|---|---|---|---|
| 201. | கா. புவனேஸ்வரி | இமையம் படைப்புகளில் சமூகவியல் கூறுகள் | 1261-1265 |
| 202. | கு. கிருபானந்த் & ர. வேணுகோபால்சாமி | சங்க இலக்கியத்தில் தமிழ்ச் சமூகம் | 1266-1271 |
| 203. | மா. மலர்க்கொடி & கோ. தமிழ்ச்செல்வி | ஐந்திணைக் குடில்கள் | 1272-1277 |
| 204. | இரா. யசோதா & இரா. விஜயராணி | இரட்டைக்காப்பியங்கள் காட்டும் மகளிரின் மாண்பு | 1278-1283 |
| 205. | கா.செந்தாமரைச்செல்வி & பு. இந்திராகாந்தி | பாவேந்தர் பாடல்களில் மக்களின் விளிம்புநிலை வாழ்வியல் | 1284-1288 |
| 206. | ர. சக்தி பிரியா | கலித்தொகை ஆய்வுகள் - ஒரு பார்வை | 1289-1294 |
| 207. | சா. சாம்கிதியோன் & சே. கிருஷ்ணவேணி | பத்துப்பாட்டு பதிப்பு வரலாறு | 1295-1298 |
| 208. | ரெ. அருணாதேவி & ஆ.மேரி இமாகுலேட் | பண்பாடு தமிழர் வாழ்வின் பயன்பாடு | 1299-1303 |
| 209. | நா. சத்தியா | புறத்திணை ஆய்வுகளின் மதிப்பீடு - சங்க இலக்கியம் | 1304-1308 |
| 210. | கா. பத்மாவதி & எ.கற்பகம் | பாணாற்றுப்படையில் விருந்தோம்பல் | 1309-1312 |
| 211. | க. தனபால் & ப. பாலமுருகன் | கடலூர் மாவட்டம் கண்மணி குணசேகரனின் படைப்புகளில் நம்பிக்கைகள் | 1313-1321 |
| 212. | மா. அய்யனார் & அ.ண. செல்வகணபதி | செ.கணேசலிங்கன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள் | 1322-1327 |
| 213. | தம்பிராசா விவானந்தராசா | கிழக்கிலங்கை வேடர் வழிபாட்டுச் சடங்குகளில் தொல்சமய அடிப்படைகள் | 1328-1333 |
| 214. | மா.லெட்சுமிப்ரியா | பழந்தமிழர் நம்பிக்கைகளில் காணப்படும் விலங்குத் தொன்மங்கள் | 1334-1337 |
| 215. | சி. ஜோதி | நாமக்கல் மாவட்ட நாட்டுப்புறக் கதைகளில் வழிபாடுகள் | 1338-1343 |
| 216. | த. கவிதா | பத்துப்பாட்டு காட்டும் திணைமயக்க வாழ்வியல் | 1344-1352 |
| 217. | க. தானு & ப. கல்பனா | அகநானூறு உணர்த்தும் குறிஞ்சித்திணைசார் உழவுத்தொழில் | 1353-1357 |
| 218. | ர. ரம்யா | பூமணியின் 'பிறகு' புதினத்தில் இன வரைவியல் கூறுகள் | 1358-1363 |
| 219. | தி. மோகனாம்பாள் | பழமொழி நானூற்றில் தொன்மக் கூறுகள் | 1364-1368 |
| 220. | P. AKILA & R. LALITHA RAJA | PHONOLOGICAL AWARENESS AND ORTHOGRAPHIC SKILLS - A COMPARATIVE STUDY BETWEEN TYPICALLY DEVELOPING CHILDREN AND CHILDREN WITH DYSLEXIA | 1369-1376 |
| 221. | இரா. கதிரேசன் | பெரும்பாணாற்றுப்படை (தா வண்ணம்) | 1377-1383 |
| 222. | வி. பிரியதர்ஷினி & சீ. குணசேகரன் | ஒப்பனை கலையில் 'நீராடல்' ஓர் அறிமுகம் | 1384-1389 |
| 223. | K. UDAYASANKAR | THE EMERGING TRENDS OF ARNI - A STUDY | 1390-1394 |
| 224. | ரா. தீபா & P.முத்துச்சாமி | சங்ககால அரண் அமைப்புகள் | 1395-1403 |
| 225. | எ.ப.சந்திரிகா | வணக்கம் வள்ளுவ! கவிதைத்தொகுதியில் பண்பாட்டு மானிடவியல் பதிவுகள் | 1404-1409 |
| 226. | த. ஜெயந்தி | கோவை மாவட்ட இருளர் பழங்குடிமக்களின் வாழ்வியல் முறைமைகள் (கள ஆய்வின் அடிப்படையில்) | 1410-1414 |
| 227. | க. கலைவேந்தன் | சிலப்பதிகாரப் பதிப்பில் உ.வே.சா | 1415-1418 |
| 228. | பெ. தவசி | அகப்பிணி தீர்வும் அறநூல் மருந்தும் | 1419-1422 |
| 229. | LOKENDER PRASHAD, VIKRAM SINGH & MILI DUTTA | SITUATION ANALYSIS OF HOMELESS IN FOUR MAJOR METROPOLITAN CITIES IN INDIA: A POPULATION DYNAMICS | 1423-1431 |
| 230. | ச. சர்புதீன் & எஸ். நாகூர்கனி | தாழை மதியவனின் படைப்புகளில் இஸ்லாமிய வாழ்வியல் | 1432-1439 |
| 231. | S. தேவி & சை. ஆசிக் ஹமீது | அப்துல்ரகுமானின் பன்முகச்சிந்தனைகள் | 1440-1447 |
| 232. | செ. ஜெயா | ஐந்திணையில் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் | 1448-1453 |
| 233. | க. ஜெயந்தி | சிற்றிலக்கிய வகைகளில் மடல் | 1454-1458 |
| 234. | க. தனலட்சுமி | இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடரும் இந்திர விழா (கோயம்புத்தூர் மாவட்டம் புலியகுலம்) | 1459-1464 |
| 235. | க. தமிழ்ச்செல்வி & பெ. தமிழரசன் | கூகை புதினத்தில் சாதியச் சிந்தனைகள் | 1466-1471 |
| 236. | J. CAROLINE JEBASHANTHINI & R. JEYA SUNDARARAJ | NATURE AND RHETORIC AT THE CROSSROADS : THE ARTIST'S INTERVENTIONS IN *THIRUKUTRALA KURAVANCHI* | 1472-1474 |
| 237. | க. மாரியப்பன் & மா. செந்தாமரை | தொல்காப்பிய நூற்பாக்களும் தமிழண்ணல் எடுத்துக்காட்டுக்களும் (சொல்லதிகாரத்தை முன்வைத்து) | 1475-1479 |
| 238. | ஜெ. பிரபு & வே. லதா | மன்னார்குடி இராஜ கோபால சுவாமி கோவில் விஜயநகர கால தூண் சிற்பங்கள் | 1480-1487 |
| 239. | கோ. தங்கராசு | அட்ட விரட்டானத் தலங்களில் சிவனின் வீரச்செயல்கள் | 1488-1493 |
| 240. | கு. ஜெயந்தி | அகநூல்களில் முல்லைத்திணை உணர்த்தும் வாழ்வியல் | 1494-1500 |
| 241. | இரா. கயல்விழி & இரா. விஜயராணி | பத்துப்பாட்டில் வேளாண் தொழில் வளர்ச்சி | 1501-1505 |
| 242. | மா. ராகுல்காந்தி & பெ. இளையாப்பிள்ளை | இலக்கியமும் இனவரைவியலும் | 1506-1513 |
| 243. | செ. யசோதா | பண்ணைக்குலமக்களின் வாழ்வும் வரலாறும் | 1514-1518 |
| 244. | துள. கௌசல்யா | அவிநாசியப்பர் கோயில் திருவிழாக்கள் | 1519-1523 |
| 245. | KAVITHA SOUNDARARAJAN | SOCIAL CUSTOMS AND CEREMONIES OF BADAGAS TRIBES IN NILGIRI PLATEAU | 1524-1528 |
| 246. | துரை. இரவிக்குமார் | சங்க இலக்கியத்தில் சோற்றுணவு | 1529-1534 |
| 247. | மா. கலைவாணி & வே.அ. பழனியப்பன் | குறுநில மன்னர்களின் அரசு உருவாக்கம் | 1535-1539 |
| 248. | ஜெ. காவேரி | குறுந்தொகையில் கூற்று முறைகள் | 1540-1543 |
| 249. | சி. கல்பனா | தக்கயாகப்பரணியில் புராணக் கூறுகள் | 1544-1548 |
| 250. | க. கண்ணகி & ம.பூபதி | திருக்குறள் காட்டும் அறிவியல் செய்திகள் | 1549-1554 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# பண்ணைக்குலமக்களின் வாழ்வும் வரலாறும்

செ. யசோதா
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

கட்டுரை சுருக்கம்

ஒவ்வொரு கூட்டம் அல்லது குலத்திற்கு ஒரு பெயர் உண்டு. பெரும்பாலும் அப்பெயர்கள் விலங்கு, பறவைகள், தாவரங்கள் பெயர்களாகவோ அல்லது தொழில் அடிப்படையில் அமைந்த பெயர்களாகவோ அமையும் ஆந்தைக் கூட்டம், கண்ணன் கூட்டம், சாத்தந்தை கூட்டம், மணியன் கூட்டம், காடைக்கூட்டம், செல்லன்கூட்டம் என்பன போன்ற கொங்கு வேளாளர் குலக்கூட்டங்களை ஓதாளர் அழகுமலைக் குறவஞ்சி 142 எனத் தொகுத்துக் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் ஏறத்தாழ 80 கூட்டங்களைப் பற்றியத் தகவல்களே கிடைத்துள்ளன. கொங்கு வெள்ளாளன் ஆட்டுப்பண்ணை, மாட்டுப் பண்ணைகளை வைத்துப் பாதுகாத்தவர்கள். பெரிய நிலத்திற்குரியவன் பண்ணைக்காரன் எனப்பட்டான். வயலில் பணி செய்வோன் பண்ணை ஆள் எனப்பட்டான். பெருநிலக் கிழாரானவர் பண்ணைக் குலத்தினர் ஆயினர். அப்படிப்பட்டப் பண்ணைக்குல வாழ்வை சிறப்பித்து கூறுவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

## முன்னுரை

வேளாண்மை நிலங்களைப் பண்ணை என்று அழைப்பர். பண்ணையையுடையவன் பண்ணையக்காரன் எனப்பட்டார். அவர் செய்யும் உழவுத்தொழில் பண்ணையம் எனப்பட்டது. ‘பண்ணை நிலங்களுக்கு சொந்தக்காரர்கள்’ என்ற பொருளில் இக்குலத்தார் பண்ணைக்குலம் என்று அழைக்கப்பட்டனர்.

## பண்ணைகுலம்

இலக்கியப்புகழ் கொண்ட பண்ணைகுலத்தின் பெயர்க் காரணத்திற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. பண்ணை, பண்ணையம் என்பது வேளாண்மையைக் குறிக்கும். பண்ணையம் செய்த குலத்தினர் பண்ணை குலமாக அழைக்கப்பட்டனர்.

பண்ணை என்ற சொல்லுக்கு மருதநிலம் வயல், தோட்டம், நீர் நிலை, ஓடை, விவசாயம் என்ற பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி கூறுகிறது. பண்ணைகுலத்தாரைப் புகழும் ஒரு தனிப் பாடலிலும் அப்புகழ் கூறப்படுகிறது.

> “திருவெழுந் தூரில் வரு கம்பநாடர்க்கடிமை திகழ்கின்ற வேளாளன் நீ சிவனுடைய பசியகல முளைவாரி அனமுதலி செய்கின்ற வேளாளன் நீ கருணை கொண்டரவின் மணி வாணர்க்கு உதவியே கதிமை பெறு வேளாளன் நீ காவலன் மதிக்கவுயர் ஆடை கீறிச் சிலந்தி காண்பிக்கும் வேளாளன் நீ வரிசைபெறு தொண்ணூத்தி ஆறுகீர்த் திக்கினிய மன்னர் தம் கை போலவே வடிதமிழ்க்கு உதவி செய் வோய் புகர் கொண்டுமே வளர்கின்ற பண்ணை குலனே தருவை நிகர் கர்ணன் ஆயிமன் வசீகரன் தந்தசந் தானமணியே தனபதிக னாகவரும் சடையன் மகிபாலா சர்க்கரை விற பன்னனே”[1]

இப்பாடலில் பண்ணை குலத்தாரின் பல்வேறு பெருமைகளில் 96 கீர்த்தி பெற்றது ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.

## பண்ணைக்குல வரலாறு

காவிரித் தென்கரை நாடனா குளித்தலை வட்டாரத்தில் வாழ்ந்த பண்ணைக்குலத்தினர் உறையூர் சோழ மன்னரின் குடி மக்களாகவும், படை மக்களாகவும் சிறப்புடன் வாழ்ந்தனர். இதனை,

"குளித்தலை வட்டாரம் ஆத்திய நல்லூரில் சாத்தந்தை குலத்தாரும் பண்ணைக்குலத் தாரும் சிறப்புடன் வாழ்ந்த தோரணையைக் குறிக்கிறது."[2]

வெள்ளோட்டை தலைநகராகக் கொண்டு பூந்துறை நாட்டை ஆண்ட சாத்தந்தை காளிங்கராயன் தன் மைத்துனன் பண்ணை குலத்தாரின் வீட்டுக்கு தாயாதிகள் புடைசூழப் பெண் கேட்கப்போனான். பூந்துறை நாட்டுக்கு நாட்டானாகி வெள்ளோடு குடியிருப்புக் காரனாகியிருக்கும் வேளையில் சாத்தந்தை கோத்திரம் காளிங்கராயக் கவுண்டன் தன்னுடைய குமாரனுக்கு திருமணம் செய்ய, மாமன் மைத்துனனான பண்ணைக்குலத்தாரின் வீட்டிற்கு பெண் கேட்டு காளிங்கராயரும், சாத்தந்தை குலத்தாளிகளும் திண்ணையில் அமர்ந்திருந்தினர். சமையல் ஆள் பண்ணை குலத்தலைவனிடம் வந்து சமையலுக்கு மிளகு சம்பா அரிசி போடுவதா? சன்ன அரிசி போடுவதா? என்று கேட்டான். 'கம்பு விளையும் சீமையிலே வாழும் இவர்களுக்கு சன்னச்சம்பாவிற்கும், மிளகு சம்பாவிற்கும் வித்தியாசம் தெரியுமோ, ஏதோ ஒரு அரிசியை போட்டு சமைத்து வை' என்று கூறினான். இச்சொற்களைக் கேட்டு காளிங்கராயன் வெகுண்டு எழுந்து. தன் நாட்டையும் நஞ்செய் ஆக்கி விட்டே உங்கள் வீட்டிற்கு பெண்ணுக்கு வருகிறோம் என்று சபதம் கூறிவிட்டுச் சீராடிக்கொண்டு பங்காளிகளுடன், மைத்துனன் வீட்டில் உணவு உண்ணாமல் ஊர்வந்து சேர்ந்தனர்.

சபதத்தை நிறைவேற்ற பவானி ஆற்றுக்கு அணை கட்டி, வாய்க்கால் வெட்டினான். புன்செய் நிலத்தை நஞ்செய் நிலமாக்கினான். பிறகு பண்ணைகுலத்தார் வீட்டிலே பெண் எடுத்தான். காளிங்கராயன் ஆயிரக்கணக்கானப் போர்க்களம் கண்ட மாபெரும் படைத்தலைவன். அத்தகைய வீராதி வீரனையே தூக்கி கனம் பார்த்துப் பெருமை படைத்தவர்கள் பண்ணை குலத்தினர். கொங்கர் குலத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

அருங்கரை அம்மனை வழிபடும் பண்ணைக் குலத்தினர், கரூர் வட்டாரத்தில் கூடலூர், கைலாசபுரம், ஊத்துக்கரைப்பாளையம் முதலிய ஊர்களில் அதிக எண்ணிக்கையிலும் மற்ற ஊர்களில் பரவலாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

நாமக்கல் கீரம்பூர் எட்டுக்கை அம்மனை வழிபடும் பண்ணைகுலத்தினர் கரூர், நெடுங்கூர், நெரூர், நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு முதலிய ஊர்களில் அதிகமாகவும், மற்ற ஊர்களில் பரவலாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

கொங்கு வரலாற்றை கூறும் இக்கொங்கு மண்டல சதகத்தை வாலசுந்தரக் கவிஞர் இயற்ற அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பண்ணை குலத்தார் ஆவார். பாயிரத்தில்,

"படிக்கவே பொருட் சாத்தந்தைப் பண்ணை
கோன் வெண்ணை
நல்லூர் கொடுத்திரு மிரணம் வாரிக் கொங்கு
செய் சாதகத்தானே"[3]

இவ்வாறே கம்பர் ராமாயணம் பாடுவதற்கு உறுதுணையாய் இருந்து ஊக்கு வித்தவர் பண்ணைகுல வேளாளர் சடையப்ப வள்ளல் என்றும், கம்பராமயணம் முடி சூட்டுப் படலத்தில் இராமனுக்கு முடிசூட்டும்போது கிரீடத்தை பண்ணைகுல வேளாளர் மரபினோர் எடுத்து கொடுக்க வசிஷ்டன் அணிவித்தான் என்று கம்பர் கூறுகிறார்.

### பண்ணைகுலத்தவர் காணி

கரூர், குளித்தலை, கீரம்பூர், ஏரூ தாழம்பாடி, நல்லிபாளையம், ஆலத்தூ அனுமன்பள்ளி, வள்ளிபுரம், தும்பங்குறிச்சி.

### காணி தெய்வம்

பண்ணை அம்மன், செல்லாண்டி அம்ம எட்டுக்கை அம்மன், மகாகாளி அம்ம

அருங்கரை அம்மன், மாரியம்மன், மாநதைபுரி அம்மன், நாட்டுராயன், அண்ணன்மார், மருதகாளி அம்மன், அனுமன் பள்ளி, சின்ன அம்மன், பெரிய அம்மன், செல்லாண்டி அம்மன் முதலானவை.

பண்ணைகுல சிறப்புகள்

சோழ நாட்டில் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன் அவன் நாட்டில் சிறு குடிக்கிழான் பண்ணனைப் பாடினான். நான் வாழும் நாட்கள் வரை பண்ணன் வாழ வேண்டும் என்று பேரரசன் ஒரு குடிமகனை வாழ்த்தினானே, அந்த பெருமை இப் பண்ணைக்குலப் பெருமையே சாரும்.

புதிய பழுமரம் நோக்கிச் செல்லும் பறவைப் போல பாணர்கள் குடும்பத்துடன் செல்கின்றனர். பசி துன்பத்தோடு செல்கின்றனர். இதனை,

"பண்ணன் உணவிடுகிறான், உண்போர் ஆரவாரம் செய்கின்றனர் எறும்பு முட்டை கொண்டு வரிசையாகச் செல்லும் அது போல பண்ணன் வீட்டில் பெற்ற சோற்றுடைக் கையோடு வீறுடன் நடந்து செல்கின்றனர். அவர்களை நோக்கிப் பசியுடன் வந்தவர்கள் மேலும் மேலும் கேட்கின்றார்கள் பசிப்பிணி மருத்துவன் இல்லம் பக்கமோ? தூரமோ?"[4]

என்று கேட்கின்றனர். பண்ணைக்குல சிறப்பை பற்றி சங்க இலக்கியங்களில் கூறியிருப்பது இக் குலத்திற்கு இன்னும் பெருமை சேர்க்கிறது.

பண்ணைக்குல பண்பாடும் விருந்தோம்பலும்

பண்ணைகுல வேளாளரின் குடிப்பண்பே விருந்தோம்பல்தான். ஒருநாளும் விருந்தின்றி உண்ணமாட்டான். விருந்திட்டே கெட்டான் வெள்ளாளன் என்பது கிராமத்து பழமொழி. பண்ணைகுலத்தவரின் சடங்குகள் விருந்தின்றி நடப்பதில்லை. பிறப்பு சடங்கு தொடங்கி, இறந்த நாள் ஈமக்கடன் வரை எல்லாச் சடங்குகளிலும் விருந்திடல் கண்டிபாக இருந்தே தீரும். விருந்தோம்பல் வேளாளரின் தலைமைக் குணமாகும்

திருவள்ளுவரும் வேளாளரின் விருந்தோம்பல் சிறப்பைக் குறித்தே விருந்தோம்பல் அதிகாரத்தைச் செய்தார். இதனை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"[5]

என்று வள்ளுவர், விருந்தாகிய உதவிகளைச் செய்வதற்காகவே ஒருவன் இல்வாழ்க்கையை நடத்துகிறான் என்பார்.

ஈகைக் குணம்

ஈதலும், இசைப்பட வாழ்வதுமே உயிர்க்கு ஊதியம் என்றார் வள்ளுவர். ஈத்துவக்கும் இன்பமே இன்பம். இந்த இன்பத்தை உடையவர்கள் பண்ணைக்குல வேளாளர்கள். இதனை,

"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையான் கண்ணே உள"[6]

என்று வள்ளுவர் கூறுகிறார். குலன் உடையான் நல்ல குடும்பத்தில் வந்த கொங்கு வேளாளன். இக்குலத்தவரிடம் இல்லை என்று வந்தவர்க்கு இல்லையென்று உரையாத நல்ல உள்ளம் உண்டு. அந்த நல்ல உள்ளத்தால் ஈகைக் குணம் உடையவனாக இருப்பவர்களும் இவர்களே. பொருளற்றார் அழிபசி தீர்ப்பதே இவர்களது பண்பாகும்.

உழவுத்தொழில்

வேளாளர் என்பதற்கு உதவி என்பது பொருளேயாயினும் உதவி எல்லாவற்றிலும் சிறந்த உதவியாகிய உணவை உண்டாக்கித் தருபவர்களையே வேளாளர் எனக் குறிப்பிடுவது மரபாயிற்று. எனவே வேளாளர் என்பார் பயிர்த் தொழில் செய்வோர்; வேளாண்மை என்பது பயிர்த்தொழில் செய்தல் எனும் பொருளில் ஆளுவது வழக்கமாயிற்று. பயிர்த்தொழில் செய்வோரை வேளாளர் எனப் பரிபாடல் கூறுகிறது.

"எருது தொழில் செய்யாதோட விடுங்கடன்
வேளாளர்க் கிணறு"[7]

உலக மக்கள் உயிரோடு வாழ்வதற்கு இன்றியமையாது தேவைப்படும் உழவுத்

தொழிலைச் செய்வோர் வேளாளர் எனப்பட்டனர். வேளாண்மை செய்பவர் வேளாளர். பண்ணைகுல மக்களும் வேளான் தொழில் செய்வதில் வல்லவராக இருந்து வருகின்றனர். பருவத்துக்கேற்ற பயிர் செய்து நல்ல விளச்சலை உருவாக்குகின்றனர். இம்மக்கள் அதிகமாக விளைவிப்பது கிழங்கு, கடலை, மிளகா, மஞ்சள், வெங்காயம், பருத்தி, சோளம், நெல், கரும்பு போன்றவைகளை அதிகமாக விளைவித்து பயன் பெருகின்றனர். வயலை உழுவதற்கு அதிகமாக மாடுகளை பயன் படுத்துகின்றனர். இப்பொழுது காலமாற்றத்தின் காரணமாகத் தற்போது இயந்திரத்தைப் பயன்படுத்தி வயலை உழுது பயிரிடுகின்றனர்.

## மகளிர் இயல்புகள்

சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம். பழந்தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களனாய் அமைந்தவை சங்ககால மகளிரின் அரும்பண்புகள். ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துகின்ற இல்லற வாழ்வே முழுமையான வாழ்வு என மேற்கொள்ளப்பட்டது. மகளிருக்கு தொல்காப்பியர் பின்வரும் பண்புகள் இன்றியமையாதன என எடுத்தோதுகின்றார்.

மகளிர் மென்மையான உடலமைப்பிற்குரியவர். புறவுலகின் பொய்மையும் சூதும் அறியாதவர். உலகின் இடையூறு நிலைகளையும் விலங்கு முதலியவற்றால் நேர்ந்திடும் இடுக்கண்களையும் உணராதவர். ஆனால் உள்ளத் திண்மையால் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொண்டு இல்லறத்தினை நல்லறமாக ஓம்பும் ஆற்றல் உடையவர்கள் அவர்களேயாவர். இவ்வாறு மகளிர்பாற் காணத்தகும் மென்னீர்மையினைச் சாயல் என்ற சொல்லால் நந்தமிழர் வழங்கினார்.

## மகளிர் அளித்த கொடைகள்

பண்ணைகுல வேளாள குடும்பத்துப் பெண்கள் குடும்பப் பொறுப்பிலும், விவசாயத்திலும் பெரும்பங்கு வகித்ததோடு சமூகப் பணிகளையும், சமயப் பணிகளையும் மேற்கொண்டு சிறந்து விளங்கியுள்ளனர். திருக்கோயில் திருப்பணிகளோடு விளக்குகள் கொடையளித்ததிலும் ஆண்களுக்குச் சரி சமமாகப் பங்கு கொண்டுள்ளனர். சோழ பாண்டிய நாடுகளில் அரண்மனை அரச மகளிர் தவிர ஏனைய மகளிர் செய்த கொடைகள் அளவில் சிறியன. ஆனால் வேளாண் பெண்கள் தனித்தும் தம் கணவரோடு சேர்ந்து பற்பல கொடைகளைச் செய்துள்ளனர்.

## குலப்பெண்கள் உரிமை

கொங்கு வேளாளர் சமுதாயத்தில் திருமணம் செய்வதில் முதல் உரிமை தாய்மாமனுக்கே உரியது. பண்ணைக்குடும்பத்து வேளாள பெண்கள் சகோதரியின் மகள் தாய்மாமனாகிய சகோதரனுக்கு உரிமைப்பெண் ஆவாள். இப்பெண் தாய்மாமனையோ அல்லது தாய்மாமன் மகனையோ தான் மணம் செய்து கொள்வதற்கு முதல் உரிமை வழங்கப்பட்டது. தாய்மாமன் வீட்டில் மகன் இல்லாதபோதோ அல்லது தாய்மாமனே திருமணம் செய்துகொள்ள இயலாத போதோ வேறுஇடத்தில் தாய்மாமன் சம்மதத்துடன் திருமணங்கள் நடைபெற்றன. சில சமயங்களில் உரிமைப் பெண் ஆணைவிட வயது மூத்திருந்த போதும் சொத்துரிமை வேறொருவருக்கு மாறிவிடக் கூடாது என்பதற்காகவும், உறவு விட்டுப்போகக் கூடாது என்பதற்காகவும் வயதில் இளையவனுக்கு திருமணம் செய்துவைத்தனர்.

## முடிவுரை

இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். சென்ற தலைமுறையைச் சார்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலில் இருக்க, இன்றைய இளைஞர்கள் வேளாண்மையை உதறிவிட்டனர். கல்வி நிலையில் சிறந்து விளங்குகின்றனர். மருத்துவர்களாகவும், பொறியியல் நிபுணர்களாகவும், ஆசிரியர்களாகவும், கல்லூரியில் பேராசிரியர்களாகவும், அரசு ஊழியர்களாகவும் இதரபல துறைகளிலும் இவ்வினத்தவர்கள் பணிபுரிகின்றனர்.

## தொகுப்புரை

- பண்ணை என்ற சொல்லுக்கு மருதநிலம் வயல், தோட்டம், நீர் நிலை, ஓடை, விவசாயம் என்ற பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி கூறுகிறது.
- பண்ணை குலம் என்ற பெயர் பண்ணைக்கீரை வழியாக ஏற்பட்டப் பெயராகும்.
- பண்ணைகுல வேளாளரின் குடிப்பண்பே விருந்தோம்பல் தான்.
- ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துகின்ற இல்லற வாழ்வே முழுமையான வாழ்வு என மேற்கொள்ளப்பட்டது.
- பண்ணைகுல வேளாள குடும்பத்துப் பெண்கள் குடும்பப் பொறுப்பிலும், விவசாயத்திலும் பெரும்பங்கு வகித்ததோடு சமூகப் பணிகளையும், சமயப் பணிகளையும் மேற்கொண்டு சிறந்து விளங்கியுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. புலவர் செ.இராசு, கொங்கு நாட்டு வேளாளர் வரலாறு, ப.305
2. கொங்கு மண்டல சாதகப்பாடல் 105
3. பாலசுந்தரன், கொங்குமண்டல சதகம், பாயிரம்
4. புறம்- 173
5. திருக்குறள்-81
6. திருக்குறள் - 223
7. பரி.20 : 62-63

## துணை நின்ற நூல்கள்


- புலவர் செ.இராசு, கொங்கு வேளாளர் பண்ணைகுல வரலாறு, கொங்கு மண்டல பதிப்பகம்-2012,கோவை.
- புலவர் செ.இராசு, கொங்கு வேளாளர் சீர்களும் இலக்கியங்களும், கொங்கு ஆய்வு மையம் ஈரோடு, 2009
- சின்னுசாமி.தே.ப. கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், ஸ்ரீ சரஸ்வதி தேவி பதிப்பகம், ஈரோடு, 2010


ஃ